**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.62/2023 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கல்யாணி | க–பெ | பெரியகருப்பன் |
| ஊர்: | : | அறந்தாங்கி | சமயம்: | |
| வயது: | : | 65/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம். | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.01.2025**

------------------------------------------------------------------------------------------------

31.01.2025

**முதல் விசாரணை :**

1) என் கணவர் பெயர் பெரியகருப்பன். நான் தற்போது அறந்தாங்கியில் வசித்து வருகிறேன். வாதியின் வழக்கறிஞரிடம் இருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. வழக்கு தாக்கல் செய்தவர் பெயர் ராக்கம்மாள். சரவணனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சரவணன் தற்போது கோட்டையூர் எழில் நகரில் வசித்து வருகிறார். நான் கோட்டையூர் எழில் நகரில் வசித்து வந்த போது சரவணன் என் வீட்டின் அருகில் வசித்து வந்தார். ராக்கம்மாள் என் தம்பி மகள் ஆவார். ராக்கம்மாள் மற்றும் சரவணனுக்கு கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்தது. நான் யதார்த்தமாக ராக்கம்மாள் வீட்டிற்கு சென்றிருந்தபோது எதிரி சரவணன் மேற்கண்ட ராக்கமாளிடம் ரூ. 6 லட்சம் கடனாக வாங்கினார். 2020ல் மேற்படி கடனை வாங்கினார். அன்று மதியம் சுமார் 12 மணியளவில் மேற்படி பணத்தை பெற்றுக்கொண்டார்.

2) ராக்கம்மாளின் கன்டனூர் வீட்டில் வைத்துதான் சரவணனன் பணம் வாங்கினார். ராக்கம்மாள் எழில் நகரில் இருந்தார் அவர் வீட்டிற்கு அருகில் நானும், சரவனனும் இருந்தோம். அதன் பின்னர் கன்டனூருக்கு குடி வந்தார். சரவணன் வரும்போது புரோ நோட்டு பூர்த்தி செய்து கொண்டுவந்தார். அதில் என்னை கையொப்பம் செய்ய சொன்னதால் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். எனக்கு படிக்க தெரியாது. மேற்படி புரோநோட்டில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. சரவணன் ராக்கம்மாளிடம் தொழில் தேவைக்காக பணம் தேவைப்படுவதாக கூறி பணம் கேட்டார். சரவணன் புதுவயலில் வட்டி கடை வைத்துள்ளார். மேற்படி ரூ.6 லட்சத்தை ரூ. 500 தாள்களாக 12 கட்டுக்கள் கொடுத்தார்.

**( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))**
**விரைவுநீதிபதி, காரைக்குடி.**